பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
20 09 2025 SATURDAY 12 40 PM
வணக்கம், ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- நாட்டின் வளர்ச்சியில் துறைமுகங்கள் முக்கியப் பங்கு வகிப்பதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.
- சரக்கு மற்றும் சேவை வரி குறைப்பு, மிகப் பெரிய சீர்திருத்த நடவடிக்கை என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா தெரிவித்துள்ளார்.
- வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்க வேண்டும் என்ற நோக்கில் பிரதமர் செயல்பட்டு வருவதாக மத்திய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார்.
- அணுசக்தி திட்டம் தொடர்பாக எந்தவொரு நியாயமற்ற நிர்பந்தத்திற்கும் ஈரான் அடிபணியாது என்று அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது.
- சீன பாரா பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் Pramod Bhagat மற்றும் Sukant Kadam இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளனர்.

>>>>>><<<<<<

நாட்டின் வளர்ச்சியில் துறைமுகங்கள் முக்கியப் பங்கு வகிப்பதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

குஜராத் மாநிலம், பாவ் நகரில் நடைபெற்ற நிகழ்ச்சியில், கடல் ஆதாரங்கள் மூலம் வளம் பெறுதல் என்ற இயக்கத்தின் கீழ், பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளை தொடங்கி வைத்து தற்போது அவர் உரையாற்றி வருகிறார்.

உலகின் அமைதி, வளம் மற்றும் ஸ்திரத்தன்மைக்கு இந்தியா சுயசார்பை அடைய வேண்டியது அவசியம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதற்கு இன்று தொடங்கி வைத்த திட்டங்கள் உதவிடும் என்று திரு. நரேந்திர மோடி தெரிவித்தார்.

இந்த நிகழ்ச்சியில் பேசிய கப்பல் போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு. சர்பானந்த சோனோவால், கடல்சார் துறை இதுவரை இல்லாத அளவிற்கு வளர்ச்சியை கண்டு வருவதாக கூறினார்.

துறைமுகங்களின் திறன் இரண்டு மடங்காக அதிகரிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

துறைமுகங்களின் சரக்கு கையாளும் திறனும் அதிகரித்துள்ளதாக அவர் கூறினார்.

நீர்வழிப் போக்குவரத்தும் வளர்ச்சி கண்டுள்ளதாக திரு. சர்பானந்த சோனோவால் தெரிவித்தார்.

>>>>>><<<<<<

சரக்கு மற்றும் சேவை வரி குறைப்பு, மிகப் பெரிய சீர்திருத்த நடவடிக்கை என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

தனியார் தொலைக்காட்சி நிறுவனத்திற்கு அளித்த பேட்டியில் இதனை தெரிவித்த அவர், பிரதமர் திரு. நரேந்திர மோடியின் உறுதியான தலைமையே இதற்கு காரணம் என்று குறிப்பிட்டார்.

இந்த சீர்திருத்த நடவடிக்கைகள் காரணமாக, பெரும்பாலான பொருட்களின் விலை குறையும் என்றும் அவர் கூறினார்.

இந்த விலைக் குறைப்பு வரும் திங்கட்கிழமை முதல் செயல்பாட்டுக்கு வருவதை அவர் சுட்டிக்காட்டினார்.

மத்திய அரசின் இந்த நடவடிக்கைக்கு அனைத்து தரப்பினரும் வரவேற்பு தெரிவித்துள்ளதாக திரு. அமித் ஷா கூறினார்.

>>>>>><<<<<<

வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்க வேண்டும் என்ற நோக்கில் பிரதமர் திரு. நரேந்திர மோடி செயல்பட்டு வருவதாக மத்திய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார்.

தமிழகத்தின் கோவில்பட்டியில் தீப்பெட்டி தொழில் நூற்றாண்டு விழா நிகழ்ச்சியில் கலந்து கொண்டு அவர் பேசினார்.

தீப்பெட்டி தொழில்துறையின் வளர்ச்சிக்கு தேவையான அனைத்து உதவிகளையும் மத்திய அரசு வழங்கும் என்றும் திருமதி. நிர்மலா சீதாராமன் கூறினார்.

(சவுண்ட் பைட் - நிர்மலா சீதாராமன் 52 செகண்ட்ஸ்)

>>>>>><<<<<<

மும்பை – அஹமதாபாத் அதிவிரைவு ரயில் போக்குவரத்து திட்டம் குறித்து ரயில்வே அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் இன்று ஆய்வு மேற்கொண்டார்.

மும்பையில் இப்பணிகளின் முன்னேற்றம் குறித்து அதிகாரிகளிடம் கேட்டறிந்த அவர், முழுவீச்சில் பணிகள் நடைபெற்று வருவதாக செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

>>>>>><<<<<<

உத்ராகண்டில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் அம்மாநில முதலமைச்சர் திரு. புஷ்கர்சிங் தாமி இன்று ஆய்வு மேற்கொண்டார்.

சமோலி மாவட்டத்திற்கு உட்பட்ட Nanda Nagar பகுதியில் பாதிப்புகளை ஆய்வு செய்த அவர், நிவாரணப் பணிகளை விரைந்து நிறைவேற்றுமாறு அறிவுறுத்தினார்.

>>>>>><<<<<<

தில்லியின் பல்வேறு பகுதிகளில் காவல்துறையினர் இன்று சோதனை நடத்தினர்.

19 இடங்களில் நடைபெற்ற இந்த சோதனைகளில், 11 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக தில்லி காவல்துறை துணை ஆணையர் திரு. ராஜீவ் ரஞ்சன் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

கைது செய்யப்பட்டவர்களிடமிருந்து நாட்டு துப்பாக்கிகளும், வெடிபொருட்களும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

இதுதொடர்பாக, அவர்களிடம் விசாரணை நடைபெற்று வருவதாகவும் திரு. ராஜீவ் ரஞ்சன் தெரிவித்தார்.

>>>>>><<<<<<

சர்வதேச கடற்கரை தூய்மை தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

இதனையொட்டி, நாடுமுழுவதும் கடற்கரை பகுதிகளில் தூய்மைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

*தமிழகத்தின் நாகை கடற்கரையில் மாணவர்கள் தூய்மைப் பணியினை மேற்கொண்டதாக எமது செய்தியாளர் செல்வன் ஜெபராஜ் தெரிவிக்கிறார்.*

*(வாய்ஸ் பைட் - செல்வன் ஜெபராஜ் 32 செகண்ட்ஸ்)*

*>>>>>><<<<<<*

*ஈரானின் அணுசக்தி திட்டம் தொடர்பாக எந்தவொரு நியாயமற்ற நிர்பந்தத்திற்கும் ஈரான் அடிபணியாது என்று அந்நாட்டு வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. Seyed Abbas Araghchi கூறியுள்ளார்.*

*சர்வதேச அணுசக்தி முகமையின் தலைவர் திரு. Rafael Grossi-யுடன் தொலைபேசி வாயிலாக நடத்திய பேச்சுக்களுக்குப் பின்னர் அவர் இக்கருத்தை தெரிவித்துள்ளார்.*

*>>>>>><<<<<<*

*காஸா பகுதியில் வன்முறையை தடுத்து நிறுத்த ஐ.நா பாதுகாப்புக் குழு தவறிவிட்டதாக ரஷ்யா குற்றம் சாட்டியுள்ளது.*

*அமெரிக்காவின் நடவடிக்கையே இதற்கு காரணம் என்று ரஷ்ய வெளியுறவு அமைச்சகம் அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளது.*

*இது, கண்டனத்திற்குரியது என்றும் ரஷ்யா கூறியுள்ளது.*

*>>>>>><<<<<<*

*கேரளாவில் உலக ஐயப்ப சங்கமம் இன்று தொடங்கியது.*

*அம்மாநில முதலமைச்சர் திரு. பினராயி விஜயன் இதனை தொடங்கி வைத்து பேசினார்.*

*சபரிமலையின் வளர்ச்சிக்கான இந்த நிகழ்ச்சியில் பங்கேற்பது மகிழ்ச்சி அளிப்பதாக அவர் கூறினார்.*

*இதற்கான திட்டங்களுக்கு மத்திய அரசு முழு ஒத்துழைப்பு அளித்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.*

*சபரிமலையில் பக்தர்கள் தான் முக்கிய முடிவுகளை மேற்கொண்டு வருவதாக அவர் கூறினார்.*

சுற்றுச் சூழல் பாதிக்கப்படாமல் எந்தவொரு வளர்ச்சித் திட்டப் பணிகளையும் மேற்கொள்ளலாம் என்று திரு. பினராயி விஜயன் தெரிவித்தார்.

>>>>>><<<<<<

ஜம்மு கஷ்மீரில் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் பாதுகாப்புப் படை வீரர் ஒருவர் காயமடைந்தார்.

உதம்பூர் மாவட்டத்திற்கு உட்பட்ட எல்லைப் பகுதியில் தீவிரவாதிகள் பதுங்கியிருப்பதாக கிடைத்த உளவுத் தகவலை அடுத்து பாதுகாப்புப் படையினர் அப்பகுதியை சுற்றிவளைத்து தேடுதல் வேட்டையில் ஈடுபட்டனர்.

அப்போது இருதரப்புக்கும் இடையே துப்பாக்கிச் சண்டை நேரிட்டதாக பாதுகாப்பு படையின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இதற்கிடையே, பூஞ்ச் மாவட்டத்தில் பாதுகாப்புப் படையினர் மேற்கொண்ட நடவடிக்கைகளில் ஏராளமான ஆயுதங்கள் பறிமுதல் செய்யப்பட்டிருப்பதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>>>><<<<<<

ஜார்க்கண்டில் *Kurmi* சமுதாயத்தினர் ரயில் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன் காரணமாக, அம்மாநிலத்தில் ரயில் சேவை பாதிக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

தடையை மீறி அவர்கள் இந்த போராட்டத்தை நடத்தி வருவதாக அவர் மேலும் கூறுகிறார்.

ஷெட்யூல்டு வகுப்பினர் பட்டியலில் சேர்க்க வேண்டும் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி *Kurmi* சமுதாயத்தினர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

>>>>>><<<<<<

சீன பாரா பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் *Pramod Bhagat* இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் அவர், 21-16, 21-19 என்ற செட்கணக்கில் ஜப்பானின் *Daisuke Fujihara*-வை வென்றார்.

மற்றொரு ஆடவர் ஒற்றையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் Sukant Kadam 21-16, 21-12 என்ற செட்கணக்கில் கொரியாவின் Cho Nadan-ஐ வென்று இறுதியாட்டத்திற்கு முன்னேறினார்.

மகளிர் ஒற்றையர் பிரிவில் நித்யஸ்ரீ சுமதி சிவனும், ஆடவர் இரட்டையர் பிரிவில் Jagdish Dilli - Naveen Sivakumar இணையும் இறுதியாட்டத்திற்கு தகுதி பெற்றுள்ளது.

>>>>>><<<<<<

போலந்தில் நடைபெற்று வரும் சர்வதேச பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் Aashi Rawat காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

>>>>>><<<<<<

14 வயதுக்குட்பட்டோருக்கான ஆசிய டென்னிஸ் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் Jensi Dipakbhai Kanabar பட்டம் வென்றார்.

>>>>>><<<<<<

சர்வதேச ஜூடோ தரவரிசை பட்டியலின் மகளிர் 63 கிலோ எடைப்பிரிவில் இந்தியாவின் Himanshi Tokas முதலிடத்தைப் பிடித்தார்.

>>>>>><<<<<<

இந்தியா - ஆஸ்திரேலியா இடையேயான மூன்றாவது மற்றும் இறுதி மகளிர் ஒருநாள் கிரிக்கெட் போட்டி இன்று தில்லியில் நடைபெறுகிறது.

>>>>>>END<<<<<<